
*PRIVATE AND CONFIDENTIAL*
*(For Members only)*

# AMERICAN MISSION COLLEGE,
# UDUPPIDDY.




## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம்

## 20வது ஆண்டறிக்கை


**28-03-2010**

## 2009/ 2010 ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்கள்




**வருகை தராதோர்:** கலாநிதி சி.சிறிசற்குணராஜா, திரு. P. சக்திவேல், திரு. R.L. தேவராஜா, திரு. K. இராஜதுரை, திருமதி. P.அருள்வேல்நாதன், திரு. V. பிரபாகரன்.

2009/ 2010 ஆண்டுக்கான நுண்கலைமன்ற நிர்வாக சபை உறுப்பினர்கள்




வருகை தராதோர்: திரு. V. சோதிராஜா

# தலைவர் உரை

1989ஆம் ஆண்டுக்கு முன்பும் எங்கள் கல்லூரிக்கென பழைய மாணவர் சங்கங்கள் இருந்ததாக அறியக் கூடியதாய் இருக்கின்றது. அவை கல்லூரிக்குத் தேவையான நிதி வழங்கலுடன் தொடர்பு இல்லாது கல்லூரிக்கும் அதன் முகாமையாளர் அல்லது அரசாங்கத்துடன் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள்வதில் மாத்திரம் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. ஆதலினால் அச்சங்கங்கள் கல்லூரியின் கல்வியுடன் அல்லது விளையாட்டுத்துறையுடன் சாரணியம் போன்ற இணைச் செயற்பாடுகளுடன் தொடர்பு இல்லாது உயிர்ப்பு குறைந்தவையாகவே செயற்பட்டன.

1989 ம் ஆண்டில் எமது கல்லூரியின் நிலை ஏறக்குறைய பூச்சியமட்டத்தை அடைந்த நிலையில் கனடாவிலிருந்து அந்த நேரம் வந்திருந்த துடிப்புள்ள திரு வை. சொர்ணலிங்கம், திரு. த. வசந்தகுமார் என்போருடன் சேர்ந்து திரு. சி. கனகசபாபதி ஆகியோரின் தூண்டுதலால் அந்த நேரம் அதிபர் பதவியை ஏற்றிருந்த திரு. க. சிதம்பரப்பிள்ளை அவர்களின் துணையோடு எமது இன்றைய பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது.

எமது இச் சங்கம் தனது இருபது ஆண்டுகளை நிறைவு செய்து இன்று இருபத்தோராவது ஆண்டில் காலடி வைக்கின்றது. இக் கால இடைவெளியில் எமது கல்லூரிக்கு எமது சங்கம் வழங்கிய பங்களிப்பைப் பற்றிச் சற்றுப் பின் நோக்கிப் பார்ப்பது எமது சிந்தனைகளைத் தூண்டச் செய்யும் ஒரு நற்காரியமாக அமையும் என நினைக்கின்றேன்.

ஆரம்ப காலத்தில் - கொட்டில்கள் அமைத்தல் பல தொண்டர் ஆசிரியர்களை அமர்த்தி அவர்களுக்கு வேதனம்

வழங்கல், சீரழித்து போயிருந்த விளையாட்டுத்துறை, சாரணியம், அழிந்து போயிருந்த விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்கத் தேவையான வசதிகளை ஏற்படுத்தல், கல்வித் தரத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபடல். போன்ற செயற்பாடுகளிலேயே எமது சங்கம் கூடிய கவனம் செலுத்தியது. இச் செயற்பாடுகளில் ஓரளவு முன்னேற்றம் அடைந்தவுடன் கல்லூரியின் கிட்டிய சுற்றாடலின் வளர்ச்சியிலும் கவனம் திருப்பி இளைஞர்களுக்கான நுண்கலைத்துறையில் பயிற்சி தகவல் தொழில் நுட்ப பயிற்சி, தொழிற் கல்வி பயிற்சி போன்றவற்றை வழங்குவதற்காக ஒரு மன்றத்தை உருவாக்கியது அவற்றுள் இப்போது நுண்கலைப் பயிற்சியே தொடர்ந்து செயற்படுகின்றது.

அந்த நேரம் தலைவராக இருந்த பேராசிரியர் அ. துரைராசாவின் மறைவின் பின் அவர் நினைவாக ஒரு தினம் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்பட்டு யாழ் மாவட்டத்தில் க.பொ.த (உ/த) இல் கணிதத் துறையில் முதலாவதாக வரும் மாணவனுக்கு ஒரு தொகைப் பணமும் பரிசும் அத் தினத்தில் வழங்கப்படும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் அவர் நினைவாக ஒரு தினத்தைக் கொண்டாடுவதற்காக ரூபா ஒரு இலட்சமும் அவரின் மகளின் கல்விற்காக ரூபா ஐம்பதாயிரமும், வன்னிப் பிரதேசத்தில் முதன்மையாக வந்த மாணவி ஒருவருக்கு ரூபா இருபத்தையாயிரம் எமது சங்கத்தால் வழங்கப்படுகின்றது. இத்தகைய செலவினங்கள் எங்கள் கல்லூரியின் வளர்ச்சியை எந்த வகையில் அதிகரிக்கச் செய்தது. என்பதை என்னால் மதிப்பிட முடியவில்லை. சென்ற ஆண்டு கல்லூரியின் விளையாட்டுத்துறைக்கு எமது சங்கம் எவ்வித உதவிகளையும் மேற்கொள்ள முடியாத நிலையிருந்தது.

இதுவரை எமது சங்கச் செயற்பாடுகள் பற்றிச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டினேன். இனி எமது சங்கத்தின் நிதி நிலைமை ஆரம்பத்திலிருந்து இன்று வரை எவ்வாறு இருந்தது என்பது பற்றிப்

பார்ப்போம். ஆரம்ப பாலத்தில் கனடா கிளைச் சங்கம் மெய்வருந்தி உழைத்த பணத்தை ஒழுங்காகவும் தேவைக்கு மிஞ்சியதாகவும் அனுப்பிக் கொண்டிருந்தது. செலவு போக மீதிப்பணம் நிலையான வைப்பில் இடப்பட்டு அதன் வட்டியையும் பெற்றுக் கொண்டிருந்தது. வருடங்கள் செல்லச் செல்ல கல்லூரித் தேவைகளும் படிப்படியாக குறைந்து கொண்டு வந்தன. போதியளவு பணம் எமது சங்கத்தில் இருந்தமையினால் கல்லூரிக்கான செலவினங்களுடன் தனது பெருமையையும் வெளிப்படுத்துவதற்கான செலவுகளில் ஈடுபட்டது போல் காணப்பட்டது. கல்லூரியின் வளர்ச்சியுடன் தொடர்பில்லாது இச் செலவினங்கள் கனடா கிளையின் சிந்தனையில் மாற்றம் ஏற்படுத்திய போல் நினைக்க வேண்டியுள்ளது. கனடா கிளையிலிருந்து வந்த பணம் படிப்படியாக குறைந்து 2004 ஆம் ஆண்டின் பின் ரூபா 50000/= மாத்திரம் அவர்களிடமிருந்து எங்களுக்குக் கிடைத்தது. ஆதலினால் எமது சங்கம் சென்ற கடைசி ஐந்து ஆண்டுகளில் படுமோசமான நிதி நெருக்கடிக்குட்பட்டது. இதனைச் சமாளிக்க ஒரு வானவில் நிகழ்ச்சியும், ஒரு அதிஷ்டலாப சீட்டும் நிகழ்த்தி ஒரு சிறிய அளவுக்கு ஆறுதல் அடைந்தது. சென்ற ஆண்டு நிதி நெருக்கடி உச்ச நிலையிலிருந்த படியினால் கல்லூரியின் விளையாட்டுத்துறைக்கு எந்த உதவியையும் எம்மால் செய்ய முடியவில்லை. இந்த நிதி நெருக்கடி காலத்தில் இனி கல்லூரிக்கான செலவுக்களை கல்லூரியே கவனிக்க வேண்டும் என்ற கருத்து சில புகழ்வாய்ந்த மாணவர்களால் பட்டும்படாத துமாய் தெரிவிக்கப்பட்டது. இனிமேல் எமது கிளைச் சங்கங்களிலிருந்து கல்லூரிச் செலவுக்கென பணம் அனுப்பப்படமாட்டாது, என்பதையே மேலே கூறிய கருத்துக்கள் சுட்டிக் காட்டுகின்றன. இருந்தாலும் எமது கிளைச் சங்கங்கள் (கனடா, சுவிஸ், கொழும்பு) நாம் விதந்துரைக்கும் சில குறிப்பிட்ட கல்லூரி மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கு பணம் அனுப்பிக்

கொண்டிருப்பார்கள் என்பது எனது நம்பிக்கை. சென்ற ஆண்டுக் கடைசியில் காணி வாங்குவதற்காக கனடாக் கிளை ரூபா எட்டு இலட்சமும், இன்று வரை கல்லூரி முகப்பு வாயிலை அமைப்பதற்கு சுவிஸ் கிளை ரூபா ஏழு இலட்சமும் அனுப்பி இருந்தன. 50 கதிரைகள் செய்வதற்காக கொழும்புக் கிளையையும் நாம் கேட்டுள்ளோம்.

இப்போதய நிதி நிலைமை தொடருமானால் கல்லூரியின் வருடந்த செலவுகளுக்கு எங்கள் சங்கம் உதவி செய்ய முடியாத நிலை ஏற்படும். அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் கல்லூரியே தனது செலவுகளை மேற்கொள்ள பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடநேரிடும். அவ்வாறு ஏற்படும் சந்தர்ப்பத்தில் எமது சங்கமும் 1989 க்கு முந்திய சங்கங்களைப் போல் உயிர்பற்ற சங்கமாக மாறும் என்பதில் எமக்கு சந்தேகம் ஏதும் கிடையாது. நாம் ஒரு செயற்றிறன் உள்ள உயிர்ப்பான சங்கமாக நீண்ட நாட்களுக்கு கல்லூரிக்குச் சேவையாற்ற முயற்சிப்போமாக!

மேலும் 1957 வரை திரு. K.T. ஜோன் அவர்கள், S.S.C வகுப்பு வரை மிஷனரிமாரின் உதவியுடனும் ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடனும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்து விட்டார். 1958 தொடக்கம் திரு. செல்லத்துரை அவர்கள் அதிபராக பதவியேற்ற பின் க. பொ.த உயர்தர வகுப்பை ஆரம்பித்தார். கல்லூரியின் பழைய மாணவர்களை ஆசிரியராக நியமித்தார். அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ற பின் கல்லூரியை நடாத்துவதில் சிரமங்கள் ஏற்பட்ட போதும் பழைய மாணவ ஆசிரியர்களின் ஒத்துழைப்பால் க. பொ. த உயர்தர வகுப்பினதும் ஏனைய வகுப்பினதும் கல்வி நிலையையும் ஏனைய இணைப்பாடவிதான, விளையாட்டுத்துறை, காரணியம், விஞ்ஞான சங்கங்களுடன் இணைந்து விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான எல்லா

செயற்பாடுகளிலும் எவ்வித தயக்கமும் இல்லாது முன்னின்று உழைத்தார் அவர் ஓய்வு பெறும் காலத்தில் எமது கல்லூரி வடமராட்சியில் உச்ச நிலையில் இருந்தது என்று கூறினால் மிகையாகாது. அவரின் ஓய்வுக்குப் பின் கல்லூரியின் தரம் படிப் படியாக வீழ்ச்சியுற்றது. 89 இல் அழிவின் எல்லையிலிருந்து. அந் நேரம் அதிபராக பதவியேற்ற திரு. சிதம்பரப்பிள்ளை இதைக் கட்டியெழுப்ப அயராது உழைத்து அரும்பாடுபட்டார். இக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றச் சிலர் முயற்சிகள் எடுத்த போதும் அதை தடுத்து நிறுத்தினார். IPKF உடன் பல சந்தர்ப்பங்களில் வாக்குவாதத்திற்குட்பட வேண்டிய நிலையிலிருந்தார். அவ்வளவு கஸ்டங்களுக்கு மத்தியிலும் அவர் ஏற்படுத்திய வளர்ச்சியுடன் தொடர்ந்து கல்லூரியின் நிலை படிப்படியாக உயர்ந்தது.

திரு. K. நடராஜா காலத்தில் கல்லூரியில் கட்டிடங்கள் நிறுவுவதற்காக அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் உதவிகள் வழங்கின. திரு. நடராஜா அவர்கள் அவ்வுதவிகளை அவரின் உபஅதிபர் திரு. க. தருமலிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடன் செம்மையாகப் பயன்படுத்தி (அவர் ஒரு பழைய மாணவனாக இல்லாத போதும்) தனது முழுமனத்துடன் கட்டிடங்களையும் கல்லூரிக்கான பல பௌதீக வளங்களையும் பெற்றுக் கொடுத்தார். அவர் கல்வி, விளையாட்டு, சாரணியம் போன்றவற்றையும் நல்ல நிலைக்கு உயர்த்தி வைத்தார். அதன் பின் இப்போதய அதிபர் திரு. க. தருமலிங்கம். நடராஜாவினால் மேற் கொண்ட நடவடிக்கைகளை - தொடர்ந்து முன்னேற்ற முயற்சிக்கின்றார்.

இக் கருத்தை நான் உங்களுக்கு தெரிவித்ததின் நோக்கம் இக் கல்லூரியை இவ்வாறு நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு அரும் பாடுபட்ட அதிபர்களை எமது சங்கம் மறந்து விட்டது போல் தோன்றுகின்றது. அவர்களின் பெருமைகள்பற்றி நினைவுகூர

விரும்பவில்லைப் போல் காணப்படுகிறது. ஆனால் 1950 இல் S.S.C வரை இங்கே படித்த மாணவன் 1989 இல் நல்ல சிறந்த புகழ்பெற்ற கல்விமானாக உபவேந்தராக இருந்தவர். எமது சங்கத்தின் தலைவராக இருந்த ஒரே ஒரு காரணத்தினால் அவர் ஆண்டாண்டு தோறும் நினைவு கூரப்படுகிறார். எனினும் எங்கள் கல்லூரியின் வளர்ச்சியில் அவர் எவ்வகையான பங்களிப்புச் செய்தார் என்று என்னால் கூறமுடியவில்லை. எங்கள் சங்கம் அவருக்கு அளிக்கும் அந்த முதன்மை ஸ்தானத்தை எங்கள் கல்லூரியை பல இடைஞ்சல்களின் மத்தியில் வளரச் செய்த அதிபர்களுக்கு வழங்காமலிருப்பது பழைய மாணவர்களாகிய எங்களின் துரதிஷ்டம் என்றே நான் கருதுகிறேன்.

**திரு. க. சண்முகசுந்தரம்,**

தலைவர்,

பழைய மாணவர் சங்கம்.

# நினைவு கூருகின்றோம்!

அண்மையில் காலமாகிய எமது கல்லூரியின் பழைய மாணவர்சங்க கொழும்புக்கிளையின் முன்னாள் செயலாளர்

**திரு. K. மகாதேவா** அவர்களையும்,

தாய்ச்சங்க ஆயுட்கால அங்கத்தவர்களான

**திருமதிA.C அருளானந்தம், திரு. ஸ்ரீ.அருள்தாஸ்**

அவர்களையும் இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

## கல்லூரி அதிபரின் அறிக்கை

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியின் 21 வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கல்லூரியின் தற்போதைய நிலைமையினை அறியத்தருகின்றேன். எமது மாணவர்களின் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிமட்டங்களை அடைவதற்கும் எமது ஆசிரியர்கள் கடும் முயற்சி எடுத்து கற்றல் - கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர். இதற்குத் துணையாகப் பெற்றோர்களும் தங்களின் பிள்ளையின் கல்வியில் கவனிப்பும், கண்காணிப்பும் உடையவர்களாக இருக்க வேண்டும். அந்த வகையில் இரு பகுதியினரும் சேர்ந்து செயற்படின் மாணவர்களின் பெறுபேறுகள் சிறப்பானதாக அமையும். இம்முறை பெறுபேறுகள் சிறப்பானதாக அமைந்தாலும் திருப்தியளிப்பனவாக இல்லை. மேலும் மாணவர்கள் கற்றல் - கற்பித்தல் தவிர்ந்த மேலதிக பாடவிதானச் செயற்பாடுகளிலும் பங்களிப்புச் செய்து தாறும் மேன்மையழடந்து பாடசாலையினையும் மேன்மைப்படுத்த வேண்டும். இதனால் சிறந்த ஆளுமை பொருந்தியவனாகவும் சமூகப் பொருத்தப்பாடுடைய வனாகவும் மாறுவான் என்பது உண்மையான விடயமாகும். எனவே இதற்கும் மாணவனைத் தூண்ட வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

மேலும் என்து நெறிப்படுத்தலினாலும் எமது ஆசிரியர்களின் சிறந்த செயற்பாட்டினாலும் எமது கல்லூரியின் கல்வியின் பெறுபேறுகள், விளையாட்டுத்துறையில் சாதனைகள் என்பன மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. எல்லா விதத்திலும் இக்கல்லூரியோடும் என்னோடும் நேரடித் தொடர்புகளை வைத்து ஆக்கபூர்வமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் (தாய்ச்சங்கம்) தலைவர் திரு. க. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் செயலாளர்

திரு.P.சுரேஸ்குமார் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரியின் சகல வளர்ச்சிக்கும் எல்லா விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிவரும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது கல்லூரியின் தேவைகளைக் கேட்டறிந்து அவற்றை செயல்வடிவமாக்கிக் கொண்டிருக்கின்ற கல்லூரியின் சுவிஸ் வாழ் பழைய மாணவர் சங்கத்திற்கு நன்றியைக் கல்லூரி சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் சங்கத்தின் தலைவர் திருமதி. த. நந்திமலர், திரு. த. ஞானேஸ்வரன், திரு. ந. புஷ்பராஜா ஆகியோருக்கும் நன்றியைத் தெரியப்படுத்துகின்றேன். எமது கல்லூரியின் நுளைவாயிலைக் (GATE) கட்டுவித்து மேலதிக செலவையும் ஏற்றுக் கொண்ட சங்கத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இச் செயற்பாடுகளுக்கு மூலகர்த்தா வாக அடிக்கடி என்னுடன் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் திரு.S.கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எனதும் கல்லூரியினதும் நன்றியைத் தெரியப்படுத்துகின்றேன் மேலும் சங்கத்தைக் கொண்டும், தன்னாலான வழியிலும் கல்லூரிக்கு பல நன்மைகள் செய்து கொண்டிருக்கும் திரு.வே.ஞானேஸ்வரன் அவர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கல்லூரி சிறந்த நிலையில் இருப்பதற்கு சீரழிந்த காலத்திலிருந்து இன்றுவரை கடுமையாக கல்லூரிக்காக உழைத்த எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக்கிளை அங்கத்தவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரியப்படுத்துகின்றேன். என்னுடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு கல்லூரியைப்பற்றி அறிந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் சங்கத் தலைவர் திரு.S.பாலேந்திரன் அவர்களுக்கு கல்லூரி சார்பாக நன்றியைத் தெரியப்படுத்து

கின்றேன். மேலும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருப்பதுடன் எமது கல்லூரியிற்கான சங்கங்களை வெளிநாடுகளில் உருவாக்கி சங்கங்களுக் கிடையேயான ஒரு வலைப்பின்னலை ஏற்படுத்திய கல்லூரியின் சர்வதேச இணைப்பாளர் கலாநிதி. த.வசந்தகுமார் அவர்களுக்கு கல்லூரியின் சார்பாக நன்றியைத் தெரியப்படுத்துகின்றேன். கனடாவில் இருந்து அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி கல்லூரியின் நன்மை தீமைகளை அறிந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் திரு. V. சொர்ணலிங்கம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்னுடன் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி கல்லூரியின் நலன்களை அறிந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினருக்கு கல்லூரியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் சங்கத்தின் தலைவர் திரு.S.தில்லைநடராசா அவர்கள் கல்லூரிக்கு நேரில் வருகை தந்து இங்குள்ள நிலைமைகளை அறிந்து, கல்லூரியின் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நல்ல பல கருத்துக்களை வழங்கி எனக்கும் நல்ல பல ஆலோசனைகள் வழங்கியமைக்காக நன்றியை கல்லூரி சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக எமது கல்லூரியின் எல்லாப் பழைய மாணவர் சங்கக் கிளைகளும் எமது தாய்ச்சங்கத்தினுடாக பாடசாலையின் மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

க. தருமலிங்கம்.

**அதிபர்.**

# யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

## 20வது வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை

## (05.04.2009)

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க 20வது வருடாந்தப் பொதுக்கூட்டம் 2009.04.05 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முப 10.30 மணிக்கு கல்லூரியின் பேராசிரியர் அ.துரைராஜா நினைவு மண்டபத்தில் தலைவர் திரு.க.சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. முதலில் 2008/2009 காலப்பகுதியில் மறைந்த எமது சங்கத்தின் அங்கத்தவர்களான திரு.EV.செல்வரட்ணம்.திரு.K.திரவியநாதன் மற்றும் கல்லூரியின் நலன்விரும்பி திரு.A.ஸ்ரீறங்கநாதன் ஆகியோரை நினைவுகூர்ந்து இரு நிமிட மௌனவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றும் நிகழ்வு நடைபெற்றுது. மங்கள விளக்கினை எமது கல்லூரியின் அதிபர் திரு.க.தருமலிங்கம், தலைவர் திரு.க.சண்முகசுந்தரம், உபதலைவர் திரு.ச.தில்லையம்பலம், உபதலைவர். திரு.தி.யோகசாமி, உப செயலாளர் திரு.சி.சுப்பிரமணியம் ஆகியோரால் ஏற்றப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தலைவர் திரு.க.சண்முகசுந்தரம் அவர்கள் தனது தலைமையுரையினை நிகழ்த்தினார்.அவர் தனது உரையில் எமது சங்கமானது முன்னாள் அதிபர் அமரர் திரு.க.சிதம்பரப்பிள்ளை அவர்கள் காலப்பகுதியில் உருவாக்கப்பட்டதெனவும் அது இன்று வரை கல்லூரியின் தேவைகளை இயன்றளவு பூரணப்படுத்தி வருவதாகவும் தெரிவித்ததுடன் எமது சங்கத்தின்செயற்பாட்டிற்கு கனடாக்கிளை ஆரம்ப காலம் தொடக்கம் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருவதாகவும் ஆனால் கடந்த சில வருடங்களாக அவர்களிடமிருந்து நிதிகளெவையும் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தார். மேலும் எமது சங்கமானது வருடாந்தம் செய்யும்

செலவினங்களை சங்கத்தின் தொழிற்பாட்டிற்கு தேவையான செலவினம்,கல்லூரியின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு தேவையான செலவினமென இரு வகுதிக்குள் அடக்கலாமெனவும் இவ்விரு வகுதிச்செலவினங்களுக்காகவும் வருடாந்தம் சராசரியாக ரூபா 4 இலட்சம் செலவிடப்பட்டு வருவதாகவும் தெரிவித்ததுடன் 2004ம் ஆண்டின் பின் கிளைச்சங்கங்களிடமிருந்தான நிதிப்பெறுவனவுகள் மிகக்குறைவாகவிருந்தமையினால் நிலையான வைப்புக்களை மீளப்பெறவேண்டிய தேவையேற்பட்ட தெனவும் தற்போதுள்ள நிதி நிலைமையை வைத்து நோக்கும் போது இனிவரும் காலங்களில் சில செலவினங்களை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ வேண்டிய நிலையேற்படுமெனத் தெரிவித்தார்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கல்லூரியின் முகப்பு அழகாகவிருக்கவேண்டியதன் அவசியம் பற்றியும், கல்லூரியின் நுழைவாயில் வேலைகள் மிக விரைவில் முடிக்கப்படுமெனவும் தெரிவித்ததுடன் நிதிப்பங்களிப்புச் செய்த சுவிஸ் கிளைக்கு தனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார். மேலும் கல்லூரிக்கான குடிநீர் வழங்கல் வேலைகளில் எமது சங்கமானது தொடர்ந்தும் முயற்சித்து வருவதாக தெரிவித்ததுடன் தனது நிர்வாக காலப்பகுதியில் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய அதிபர், செயலாளர், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தனது நன்றியினைத் தெரிவித்து தனது உரையினை நிறைவு செய்தார்.

தொடர்ந்து கல்லூரியின் அதிபர் திரு க.தருமலிங்கம் அவர்கள் உரையாற்றுகையில் எமது கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்கள் வசதி குறைந்தவரகளாக காணப்படுவதுடன் அவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவது குறைவெனவும் மாணவர்களது கல்விச் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் மட்டுமல்லாது பெற்றோரும் கூடிய கவனமெடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத்தெரிவிக்கையில் இந்த வருடம் கல்வித்துறையைப் பொறுத்தவரையில் எமது கல்லூரி மாணவர்கள் பல சாதனைகளைப்புரிந்துள்ளதாகவும் முதல் தடவையாக க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 10 மாணவர்கள் 3Aசித்தி பெற்றிருப்பதாகவும், அதேபோல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 7மாணவர்கள் சித்திபெற்றிருப்பதாகவும் தெரிவித்ததுடன் விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரை தேசிய மட்ட சாதனையொன்று நிகழ்த்தப்பட்டிருப்பதாகவும் கல்லூரியின் சாரணிய செயற்பாடுகள் சிறப்பாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்லூரியின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் பழையமாணவர் சங்கத்தின் தாய்ச்சங்கத்தின் தலைவர், செயலாளர். நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்தார். அத்துடன் பாடசாலையின் தேவைகளை அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அறியும் கனடாக் கிளையினருக்கும், சுவிஸ் கிளையினருக்கும், கொழும்புக் கிளையினருக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

அடுத்த நிகழ்வாக நுண்கலைமன்ற செயலாளர் திரு.கொ.குணசிங்கம் அவர்களால் 2008/2009 ம் ஆண்டுக்கான நுண்கலைமன்ற செயற்பாட்டறிக்கை வாசிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து செயலாளரினால் 19வது வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. அறிக்கை சரியென திரு.S.சூரியகுமார் அவர்கள் முன்மொழிய, திரு.S.தில்லையம்பலம் அவர்கள் வழிமொழிய சபையினரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தொடர்ந்து செயலாளரினால் 19வது வருடத்திற்கான செயற்பாட்டறிக்கை வாசிக்கப்பட்டது. அறிக்கை சரியென

திரு.S.சுப்பிரமணியம் அவர்கள் முன்மொழிய திரு.T.யோகசாமி அவர்கள் வழிமொழிய சபையினரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அறிக்கையில் எழும் விடயங்கள் தொடர்பில் ஆராய்கையில் கலாநிதி.சி.சிறிசற்குணராஜா அவர்கள் கருத்து தெரிவிக்கையில் நுண்கலைமன்ற செயற்பாடுகளை பாடசாலை அயலில் உள்ள ஆலய நிர்வாகங்கள் அல்லது இந்து அமைப்புக்கள் பொறுப்பேற்பது நல்லதெனவும், மேலும் பேராசிரியர் நினைவு தினத்தை கல்லூரியின் பரிசளிப்பு விழா போன்ற வேறொரு நிகழ்வுடன் இணைத்து நடாத்துவது செலவு சிக்கனம் மற்றும் சிறப்பாகவும் அமையுமெனவும் தெரிவித்தார்.

மேலும் அறிக்கையின் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்ட சங்கத்தின் யூலை 2001 தொடக்கம் 31.12.2008 வரையான காலப்பகுதியில் காணி கொள்வனவிற்கு செலவளிக்கப்பட்ட தொகை விடயத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 600000.00 தவறானதென திரு.பொ.வியாகேசு அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் உடனடியாகவே திருத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதியநிர்வாகத் தெரிவை அதிபர் தலைமையில் நடாத்துவதற்காக தலைவர் அவர்கள் அப்பொறுப்பை அதிபர் அவர்களிடம் கையளித்தார். அதன்பிரகாரம் பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

| **செயலாளர்** | **முன்மொழிந்தவர்** | **வழிமொழிந்தவர்** |
|---|---|---|
| திரு.பொ.சுரேஸ்குமார் | திரு.ச.தில்லையம்பலம் | திரு.S.சூரியகுமார் |
| **தலைவர்** | | |
| திரு.க.சண்முகசுந்தரம் | கலாநிதி.சி.சிறிசற்குணராஜா | திரு.சி.சுப்பிரமணியம் |

**உபதலைவர்கள்**

திரு.ச.தில்லையம்பலம் திரு.கொ.குணசிங்கம் திரு.S.சூரியகுமார்
திரு.தி.யோகசாமி திரு.சி.சுப்பிரமணியம் திரு.வே.பிரபாகரன்

**இணைச்செயலாளர்**

திரு.சி.சுப்பிரமணியம் திரு.ச.தில்லையம்பலம் திரு.S.சூரியகுமார்

**பொருளாளர்**

திருமதி.ப.அருள்வேல்நாதன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்

**நிர்வாகசபை உறுப்பினர்கள்**

கலாநிதி.சி.சிறிசற்குணராஜா
திரு.கொ.குணசிங்கம்
திரு.S.சூரியகுமார்
திரு.வே.பிரபாகரன்
திரு.R.L.தேவராஜா
திரு.P.சக்திவேல்
திரு.A.இராஜதுரை
திருமதி.கீ.கிரிதரன்
திருமதி.ச.சச்சிதானந்தம்

**கணக்காய்வாளர்**

திரு.S.இராமகிருஷ்ணா

**நுண்கலைமன்ற பொதுச்சபை உறுப்பினர்கள்**

திரு.M..P.தருமலிங்கம்
திரு.V.சோதிராசா
திரு.M.பாலசிங்கம்

இறுதியாக செயலாளரது நன்றியுரையுடன் கூட்டமானது பி.ப 12.30மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

பொ. சுரேஸ்குமார்
**செயலாளர்**

# The Executive committee of the UAMC-PPA-COLOMBO BRANCH

## 2009/2010

| | | |
|---|---|---|
| **Vice Patrons** | : | Mr.K.Shanmugasundaram |
| | | Mr.E.Panchanathan |
| | | Mr.R.Ponnampalam |
| | | Mr.T.Ragunathan |
| | | Dr.R.Gobalasundaram |
| **President** | : | Mr.S.Thillainadarajah |
| **Vice President s** | : | Mr.R.Muthurathnananthan |
| | | Mr.E.Eeswaralingam |
| | | M.K.Yogeswaran |
| | | Mr.N.Saravanabavan |
| | | Mr.V.Selvaradnam |
| **Secretary** | : | Mr.K.Sabaradnam |
| **Asst. Secretary** | : | Mr.T.Laxmivasan |
| **Treasurer** | : | Mr.M.kanapathippillai |
| **Asst. Treasurer** | .: | Mr.P.Sivalingam |
| **Committee** | : | Mr.K.Neelakandan |
| | | Mr.A.Thalayasigam |
| | | Mr.S.J.Jeyakumar |
| | | Mr.M.Sabaradnam |
| | | Mr.V.M.Nadarajah |
| | | Mrs.K.Ilampirainathan |
| **Auditor** | : | Mr.V.Kandasamy |

## பழைய மாணவர் சங்கம்
## யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கலலூரி

# 20 வது ஆண்டு செயற்பாட்டு அறிக்கை

(05.04.2009 - 28.03.2010)

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 05.04.2009 தொடக்கம் 28.03.2010 வரையான காலப்பகுதிக்கான 20 வது ஆண்டு செயற்பாட்டறிக்கையினை தங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எமது சங்கமானது கல்லூரியின் கல்விசார், கல்விசாராத செயற்பாடுகளின் அபிவிருத்தியில் முனைப்புடன் செயலாற்றி வருகின்றது. எமது இப்பணியானது கடந்த 20 வருடங்களாக சிறப்பாக அமைந்திருந்ததுடன் இன்று தனது 21 வது வருடத்தில் கால்பதித்துள்ளது. இந்நேரத்தில் இவ் வெற்றிக்கு காரணமானவர்கள் எமது கிளைச் சங்கங்களும், கடந்த காலங்களில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய தலைவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், அதிபர்கள் என்றால் மிகையாகாது. அந்த வகையில் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை எமது செயற்பாட்டிற்கு உறுதுணையாக ஒத்துழைப்பு நல்கிவரும் கிளைச்சங்கங்களான கனடாக் கிளை, கொழும்புக் கிளை, சுவிஸ் கிளை, மற்றும் அண்மையில் உருவாக்கப்பட்ட லண்டன் கிளை என்பவற்றிற்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் . கல்லூரியின் அதிபர் திரு.க.தருமலிங்கம் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## கல்வி அபிவிருத்தி.

மாணவர்களின் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளில் எமது சங்கத்தின் பங்களிப்பு வழமைபோல் தொண்டராசிரியர் வேதனம், மேதிக ஆங்கில ஆசிரியருக்கான வேதனம், நுண்கலைமன்ற ஆசிரியர்களுக்கான வேதனம் என்றவகையில் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது தொண்டராசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட்டதனாலும் கடந்த வருடத்தில்ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட்டதாலும் 2010 தை மாதம் முதல் தொண்டராசிரியருக்கான வேதனமும் மேலதிக ஆங்கில ஆசிரியருக்கான வேதனமும் நிறுத்தப்பட்டுள்ளது. 2009ம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் பெறுபேறுகள் வருமாறு

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2009 (வெட்டுப்புள்ளி 140) .

| விண்ணப்பித்தோர் எண்ணிக்கை | தோற்றியோர் எண்ணிக்கை | சித்தியடைந்தோர்எண்ணிக்கை | சித்திடயடைந்த வீதம | 100 இற்கு மேல் பெற்றவர் எண்ணிக்கை் |
|---|---|---|---|---|
| **58** | **55** | **02** | **3.6%** | **18** |

## க.பொ.த உயர்தரப்பரீட்சை - 2009

| பாடரீதி யானதுறை | 1ம் அமர்வு | | | | 2ம் அமர்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | விண்ணப்பி த்தோர் எண்ணிக்கை | தோற்றி யோர்எண் ணிக்கை | சித்தியடை ந்தோர் எண்ணிக்கை | சதவீதம் எண்ணி க்கை | விண்ணப்பி த்தோர் எண்ணிக்கை | தோற்றி யோர் எண் ணிக்கை | சித்தியடை ந்தோர் எண்ணிக்கை | சதவீதம் |
| கணிதம் | 09 | 09 | 03 | 33.3 | 07 | 07 | 02 | 28.6 |
| உயிரியல் | 03 | 03 | 00 | - | 03 | 02 | 01 | 50.0 |
| வர்த்தகம் | 09 | 09 | 09 | 100 | 05 | 05 | 04 | 80 |
| கலை | 35 | 35 | 34 | 97.1 | 29 | 19 | 15 | 78.9 |

| பாடரீதியான துறை | பெறுபேறு | மாணவர் எண்ணிக்கை | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| கணிதம் | 3A | 01 | 10 |
| உயிரியல் | A2B | 01 | 43 |
| வர்த்தகம் | 2AB | 01 | 28 |
| கலை | 3A | 04 | ..... |

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 5 மாணவர்கள் 3A பெற்றமை சிறப்பாகும் 2009 ம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப்பரீட்சை முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுத்துறை

2009 ம் ஆண்டு காலப்பகுதியில் விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் எமது கல்லூரி மாணவர்கள் வலய,மாவட்ட மட்டங்களில் சிறப்பாகச் செயற்பட்டனர். கடினபந்து கிரிக்கட் தொடர்பில் 2009 ம் ஆண்டு எமது சங்கத்தின் நிதி நிலைமையை கருத்திற்கொண்டு எம்மால் அதிபரது கோரிக்கையை நிறைவேற்றமுடியாமல் போய்விட்டது. வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிக்கான உபசரணைச் செலவை மட்டுமே எம்மால் வழங்க முடிந்தது.

2010ம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுனர்ப் போட்டிகள் 13.02.2010 அன்று கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக எமது சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் யாழ் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி
S. சிறிசற்குணராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## பரிசில் நாளும் பேராசிரியர் நினைவு நாளும் - 2009

வழமைபோல பேராசிரியர் நினைவு தினமானது யூன் மாதம் 11 ம் திகதி நடாத்தப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால் 2009ம் ஆண்டு பேராசிரியர் நினைவு தினத்தை கல்லூரியின் பரிசில் நாளுடன் இணைத்துக் கொண்டாடுவது என்ற நிர்வாக சபையின் தீர்மானத்திற்கு அமைவாக 08.08.2009 அன்று கல்லூரியின் பரிசில் நாளும் பேராசிரியர் நினைவு தினமும் இணைந்து கொண்டாடப்பட்டது.

பேராசிரியர் நினைவு தினத்திற்கான நினைவுப் பேருரையை எமது கல்லூரியின் பழைய மாணவனும் எமது சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் யாழ் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய கலாநிதி S. சிறிசற்குணராசா அவர்கள் "பகவத் கீதை ஓர் அறிமுகம்" என்ற தலைப்பில் நிகழ்த்தினார்

அன்றைய தினம் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த நினைவுப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்வர்கள் வருமாறு....

01) க.பொ. த உயர்தரப்பரீட்சையில் 2008ல் மாவட்டமட்டத்தில் கணிதத்துறையில் முதலிடம் பெற்ற ஹாட்லி கல்லூரி மாணவன் T முகுந்தன்

02) க.பொ.த உயர்தரப் பரீட்சை 2008ல் எமது கல்லூரி மட்டத்தில் கணிதத்துறையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவன் செல்வன் S. சேயேந்தன்.

தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் மாகாண உதவிக்கல்விப் பணிப்பாளருமாகிய திரு. ந அனந்தராஜ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். 2008ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 10 மாணவர்கள் 3A பெற்றமையால் பரிசளிப்பு தொடர்பான மேலதிக செலவை கருத்திற் கொண்டு ரூபா 60,000 அதிபரின் வேண்டுகோளுக்கு அமைய வழங்கப்பட்டது. வழமைபோல் க.பொ.த உயர்தரப்பரீட்சை, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும்,க.பொ.த சாதாரணதர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் , பாடரீதியில் பொதுத்திறமை, பொதுத்திறமை சாராத விசேடபாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆரம்ப, இடைநிலை, உயர்தரப்பிரிவு மாணவர்களும் சங்கத்தின் சார்பில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படனர்.

**சர்வதேச ஆசிரியர் தினம்**

2009ம் ஆண்டு சர்வதேச ஆசிரியர் தினமானது 06.10.2009 அன்று உயர்தர மாணவர்களும் எமது சங்கமும் இணைந்து சிறப்பாக கொண்டாடப்பட்டதுடன் அன்றைய தினம் ஆசிரியர்கள் மதிய உணவு வழங்கி கௌரவிக்கப்படனர்.

## காணி கொள்வனவு

கல்லூரியின் கிழக்குப்புறமாகவுள்ள தனியார் காணிகளில் 5 பரப்பைக் கொள்வனவு செய்வதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் பூரணம் அடைந்து அதற்கான நிதியாக ரூபா 8 இலட்சம் கனடாக் கிளையினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது காணிக்கான உரிமையாளர்கள் தமது காணிக்கு பதிலாக வேறு இடத்தில் தங்களுக்கு காணிகள் வழங்கும் பட்சத்தில் மட்டுமே தாம் காணியை விற்கத் தயாராக இருப்பதாக கூறுகின்றனர். இதனால் மேற்படி காணி கொள்வனவிற்கான முயற்சி தற்காலிகமாக கைவிடப்பட்டதுடன் காணி உரிமையாளருக்கான பதிற் காணிகளை தேடும் முயற்சியில் அதிபரும் எமது சங்கத்தின் உப செயலாளருமாகிய திருS.சுப்பிரமணியம் அவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

## நிதிப் பெறுவனவுகள்

***2009 / 2010 ஆண்டுக் காலப்பகுதியில் எமது சங்கத்திற்கு கிடைத்த நிதி வளங்கள் வருமாறு..***

01) கல்லூரியின் கிழக்குப் புறமாக உள்ள காணி கொள்வனவிற்காக ரூபா 8 இலட்சம் கனடாக் கிளையினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

02) கல்லூரியின் முகப்பு வாயில் அமைத்தற்கான செலவினத்தின் மிகுதிப் பணமான ரூபா 3 இலட்சம் சுவிஸ் கிளையினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது

03) அண்மையில் வருகை தந்த கலாநிதி T.வசந்தகுமார் அவர்கள் மூலமாகலண்டன் கிளையினால் அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 50000

04) எமது சங்கத்தின் உப தலைவர் திரு S.தில்லையம்பலம் அவர்களின் முயற்சியினால் இரண்டு நிதியங்கள் கிடைக்கப் பெற்றுள்ளது

1. பேராசிரியர் தின கணிதத்துறையில் மாவட்ட நிலையில் முதலிடம் பெறும் மாணவனுக்குரிய பரிசிலை வழங்கும் பொருட்டு எமது கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக இருக்கும் திரு. பாலசிங்கம் மாணிக்கவாசகர் அவர்கள் ரூபா 101,000 அனுப்பியுள்ளார்.

2. கல்லூரி மட்டத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதத்துறையில் முதலிடம் பெறும் மாணவனுக்குரிய பேராசிரியர் நினைவுப் பரிசினை வழங்குவதற்காக எமது கல்லூரியின் பழைய மாணவன் திரு SM ஞானாநந்தன் அவர்கள் ரூபா 100000 அனுப்பியுள்ளார். இவ்விரு நிதியங்களில் இருந்தும் பெறப்படும் வட்டித்தொகை பேராசிரியர் நினைவு தின நினைவுப் பரிசிற்காக செலவிடப்படும் மேற்படி இரு நிதியங்களையும் எமக்களித்திருந்த திரு. பா.மாணிக்கவாசகருக்கும், திரு.SM ஞானந்தனுக்கும் இம்முயற்சியில் ஈடுபட்ட திரு S. தில்லையம்பலம் அவர்களுக்கும் எமது நன்றிகளும் பாராட்டும் உரித்தாகுக.

## நுளைவாயிற் கதவு நிர்மாணம்

கல்லூரியின் பிரதான நுளைவாயிற் கதவு வேலைகள் 2008ம் ஆண்டு சுவிஸ் கிளையின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதிருந்த நிலைமையில் மூலப் பொருட்களின் கிடைப்பனவில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமக உரிய காலத்தில் பூரணமாக்க முடியாது போனது இருந்தும் அதிபரதும், எமது சங்கத்தினதும் அயராத முயற்சி காரணமாக வேலைகள் பூரணமாக்கப்பட்டு 11.06.2009 அன்று பேராசிரியர் அ. துரைராஜா நினைவு தினத்தன்று எமது சங்கத்தின் தலைவர் திரு. க. சண்முகசுந்தரம் அவர்களால் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. மேற்படி வேலைகளுக்காக கிட்டத்தட்ட ரூபா 7 இலட்சம் செலவிடப்பட்டதுடன் மிகுதியாக உள்ள வேலைகளுக்கான கொடுப்பனவுகளை சுவிஸ் கிளை அண்மையில் வழங்கியுள்ளது. விரைவில் மிகுதி வேலைகள் பூரணமாக்கப்படும். மேற்படி வேலைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய எமது கல்லூரி அதிபர் திரு.க. தருமலிங்கம் அவர்களுக்கும், எமது சங்கத்தின் சுவிஸ் கிளையினர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## குடிநீர் வசதி வேலைத்திட்டம்.

கல்லூரியின் குடிநீர்ப்பிரச்சனை நீண்டகாலப் பிரச்சனையாகவே காணப்படுகின்றது. 2009 ம் ஆண்டு எமது சங்கத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியையே தழுவியுள்ளது. எனினும் இந்த வருடம் மகளிர் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு அவர்களின் கல்லூரி வளவினுள் அதிபரின் அனுமதியுடனும், வலயக்கல்வி அலுவலகத்தின் உதவியுடனும் குழாய்க்கிணறு ஒன்றை அமைப்பதன் மூலம் இவ்வருடம் குடிநீர்ப்பிரச்சனை தீர்க்கப்படும் என அதிபர் உறுதியளித்துள்ளார்.

## நிர்வாக சபைக் கூட்டங்கள்

05.04.2009 தொடக்கம் 28.03.2010 வரையான காலப்பகுதியில் மொத்தம் 13 நிர்வாக சபைக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது இதில் ஒரு விசேட கூட்டமும் அடங்கும்.

| நிர்வாக சபை உறுப்பினர் பெயர் | நடைபெற்ற மொத்த கூட்டங்களின் எண்ணிக்கை | கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. திரு.Kசண்முகசுந்தரம் | 13 | 12 |
| 02. திரு S.தில்லையம்பலம் | 13 | 10 |
| 03. திரு.T.யோகசாமி | 13 | 09 |
| 04. திரு.P.சுரேஸ்குமார் | 13 | 10 |
| 05. திரு.S.சுப்பிரமணியம் | 13 | 12 |
| 06. திரு.K.குணசிங்கம் | 13 | 08 |
| 07. திரு.S.சூரியகுமார் | 13 | 11 |
| 08. கலாநிதி.S சிறிசற்குணராசா | 13 | 09 |
| 09. திரு. A.இராசதுரை | 13 | 11 |
| 10. திரு.V. பிரபாகரன் | 13 | 09 |
| 11. திரு.R.L.தேவராசா | 13 | 10 |
| 12. திரு.P சக்திவேல் | 13 | 03 |
| 13. திருமதி.C.சச்சிதானந்தம் | 13 | 09 |
| 14. திருமதி.G.கிரிதரன் | 13 | 05 |
| 15. திருமதி.P.அருள்வேல்நாதன். | 13 | 10 |

## நன்றிகள்

2009/2010 வருட காலப்பகுதியில் எமது சங்கத்தின் செயற்பாடுகளை சிறப்பாக செயற்படுத்த ஒத்துழைப்பு நல்கிய கல்லூரி அதிபர், தலைவர் மற்றும், நிர்வாக சபை உறுப்பினர்கள், நுண்கலை மன்ற உறுப்பினர்கள் குறிப்பாக கிளைச்சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொ.சுரேஸ்குமார்
செயலாளர்

## யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, பழைய மாணவர் சங்க நுண் கலை மன்ற வருடாந்த அறிக்கை.

(05.04.2009 தொடக்கம் - 21.02.2010)

நுண்கலை மன்றத்தின் வருடாந்த அறிக்கையினை சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மேற்படி மன்றமானது பழைய மாணவர் சங்கத்தின் பிரிவாக செயற்படுவது அனைவரும் அறிந்ததே. 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை 18 வது அகவையில் உள்ளது. ஆனால் அன்று தொட்டு 2007 ம் ஆண்டுவரை மன்றத்தில் பயின்ற பிள்ளைகளினதும் போதனாசிரியர்களின் விபரங்கள் பெறமுடியாதுள்ளது.

**இக் காலநிர்வாகிகள் வருமாறு**

1. திரு. தி. யோகசாமி (இளைப்பாறிய அதிபர்) தலைவர்.
2. திரு. கொ. குணசிங்கம் (ஆசிரியர் ஆலோசகர்) செயலாளர்.
3. திருமதி. ப. அருள்வேல்நாதன் (ஆசிரியை) பொருளாளர்.
4. திருமதி. கீ. கிரிதரன் (ஆசிரியை சங்கீதம்)
5. திரு. பொ. தர்மலிங்கம்
6. திரு. வி. சோதிராசா
7. திரு. மா. பாலசிங்கம்

ஆகியோர் செயற்பட்டு வந்துள்ளனர். இக்காலத்தில் 09 நிர்வாக சபைக்கூட்டமும் போதனாசிரியர்களுடன் 2 கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளோம். கூட்டங்களில் மிக ஆர்வத்துடன் மன்ற வளர்ச்சி கருதி நிர்வாகிகள் விவாதித்து ஒருமனதாக தீர்மானங்கள் எடுத்து வந்துள்ளோம். அவற்றில் சில தீர்மானங்கள் இன்று வரை நடைமுறைப்படுத்த முடிய வில்லை

**அவையாவன.**

1. முறைசாராக் கல்வி பிரிவின் - பயிற்சி வகுப்பு நடாத்துதல்.
2. மன்ற கலை நிகழ்வுகள் சன்னதியான் ஆச்சரமத்தில் நடாத்துதல்.
3. நுண்கலை மன்ற பிள்ளைகளுக்கு இடையே போட்டி நடாத்துதல்.

இவை நடைமுறைப்படுத்த போதனாசிரியர்கள் மாறுதல் பிள்ளைகளின் வரவு ஒழுங்கின்மை, கடிதத் தொடர்புகளுக்கான இடையூறுகள், பிரச்சார ஏற்பாடுகள் இன்மை, சனி, ஞாயிறுகளில் பாடசாலையில் பரீட்சை, வேறுநிகழ்வுகள் தடையாக அமைந்து விட்டன.

**மாணவர், போதனாசிரியர் கட்டண, கொடுப்பனவு விபரம் வருமாறு**

| போதனாசிரியர் பெயர் | பயிற்சி | மாணவர் | | மாணவரிடம் அறவிடுவது | போதனாசிரியர் கொடுப்பனவு மாதாந்தம் | இக்காலப்பகுதியில் மாணவரிடம் அறவிட்டது. |
|---|---|---|---|---|---|---|
| | | சேர்ந்தவர்கள் | சராசரி வரவு | | | |
| 1.செல்விP.பொபிதா | நடனம் | 50 | 24 | 100/= | 2000/= | 16000/= |
| 2.செல்வி.T.பிரதீபா | பாட்டு | 16 | 08 | 75/= | 1500/= | 9000/= |
| 3.திருமதிS.தயாதர்சினி | வயலின் | 14 | 08 | 200/= | 2500/= | 12500/= |
| 4.திரு.T.பகிர்தன் | மிருதங்கம் | 15 | 06 | 150/= | 2000/= | 12000/= |
| மொத்தம் | | 95 | 46 | | | 49500/= |

வரவு செலவு அறிக்கைப்படி மொத்தவரவு 60110/= ரூபாவாகவும் மொத்தசெலவாக 71595/= ரூபாவாகவும் உள்ளது. இதில் மேலதிக செலவு 11485/= ரூபாவை தாய்ச்சங்கம் வழங்கியுள்ளது ஏனைய விபரங்கள் பொருளாளர் அறிக்கையில் தெரிந்து கொள்ளலாம்.

## 2009ம் ஆண்டு வடஇலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தோற்றியோரும் பெறுபேறுகளும்

| பிரிவு | தோற்றியோர் | பெபேறு | | | வீதம் |
|---|---|---|---|---|---|
| | | தரம் I | தரம் II | சாதாரணம் | |
| நடனம் தரம் I | 15 | - | 02 | 13 | 100% |
| நடனம் தரம் II | 07 | 01 | 01 | 05 | 100% |
| பாட்டு தரம் I | 04 | 01 | 02 | 01 | 100% |
| பாட்டு தரம் II | 02 | - | 01 | 01 | 100% |

## 2010இல் பரீட்சைக்குத் தோற்றுவோர்

| பிரிவு | தரம் I | தரம் II | தரம் III | மொத்தம் |
|---|---|---|---|---|
| நடனம் | 17 | 07 | 08 | 32 |
| பாட்டு | 01 | 04 | 02 | 07 |
| வயலின் | 03 | 01 | - | 04 |
| மிருதங்கம் | 08 | - | - | 08 |

இம்மன்ற செயற்பாட்டிற்கு தாய்ச்சங்கம் இலாப நோக்கின்றி கலையை வளர்க்கும் நோக்குடன் ஆதரவு வழங்கிவருவது சிறப்பம்சமாக உள்ளது.

எமது நிர்வாகக்காலப் பகுதியில் வேண்டிய வழிகாட்டடல் ஆலோசனைகள் வழங்கிய அதிபர், நிர்வாகிகள், பழைய மாணவர் சங்கத்தினருக்கும் நன்றிகள் திரு. மா. பாலசிங்கம் பயிற்சிகள் நடைபெறும் காலங்களில் முழுநேர ஊழியராகக் கடமையாற்றி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொ.குணசிங்கம்

**செயலாளர்.**

# வங்கிகளில் சேமிப்புக் கணக்குகள்

1) தேசிய சேமிப்பு வங்கியில்

**நிலையான வைப்புக்கள்:-**

01. வைப்பு இலக்கம் 200320364070 தொகை(வருடம்) 200 000 00
    CCNO - (051173)(15.02.2009) முதிர்வு 224 000 00

02. வைப்பு இலக்கம் 2/0032/03/96087தொகை (3மாதம்) 225 000 00
    CCNO - (318785)(28.11.2009) முதிர்வு சீட்டிழுப்பால் 232 593 75

03. வைப்பு இலக்கம் 2/0032/04/09740தொகை (3மாதம்) 200 000 00
    CCNO - (393523)(12/02.2010) முதிர்வு சீட்டிழுப்பால் 213 726 13

04. வைப்பு இலக்கம் 200320269000 தொகை (3மாதம்) 5 000 00
    CCNO - (537087)(மறைந்த திரு அருளானந்தம் ஆசிரியர் நினைவுப் பரிசிலுக்காக (16.04.2009) 15 319 00

05. வைப்பு இலக்கம் 200320233005 தொகை 30 000 00
    CCNO - (655961)(21.02.2010) 53 267 50

06. A.பேராசிரியர் நினைவுப் பரிசில்களுக்கான வைப்பு இல 101 000 00
    2/0032/05/10777 திகதி (05.02.2010) (6 மாதம்)

07. B. நினைவுப் பரிசில்களுக்கான வைப்பு இல 100 000 00
    2/0032/05/09426 திகதி (23.01.2010) (6 மாதம்)

08. HNB இல் நிலையான வைப்பு இல 800 000 00
    118030030376 திகதி (10.08.2009) (3 மாதம்)
    (கனடா அனுப்பிய 13 இலட்சத்தில் 5 இலட்சம் பெண்கள் பாடசாலைக்குவழங்கப்பட மிகுதி 8 இலட்சம் நிலையான வைப்பில் இடப்பட்டது) முதிர்வு திகதி 10.02.2010

## சேமிப்பு கணக்குகள்:-

| | | |
|---|---|---|
| 01. | இலங்கை வங்கி கண/இல 7347556(26.02.2010) | 90356. 79 |
| 02. | NSB கண/இல 452349(29.12.2009) | 5328. 82 |
| 03. | HNB கண/இல 02-0107201-2(26.02.2010) | 4853. 20 |

***மேற்படி நிதி ஆண்டிற்கான வரவு செலவுக்கணக்குகள் சரியானதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகின்றேன்.***

ஒப்பம் - திருமதி ப. அருள்வேல்நாதன்
***(பொருளாளர்)***

ஒப்பம் - திரு.S.இராமகிருஸ்ணா
*(கணக்காய்வாளர்)*

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர்சங்கம் 2009 தை தொடக்கம் 2009 மார்கழி வரைக்குமான வரவு செலவுக் கணக்கு.**

| வரவு | தொகை |
|---|---|
| 01. 1.1.2009 இல் கையிருப்பு வங்கியில் 69,162.70<br>காசாக 2,954.65 | 72,117 35 |
| 02. நுண்கலை மன்றத்தால் வரவு | 48,625 00 |
| 03. அங்கத்துவப்பணம் (13 x 500) | 6,500 00 |
| 04. இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் இட்டபணம். | 760,475 00 |
| 05. பேராசிரியர் நினைவுப் பரிசிற்காக திரு பா மாணிக்க வாசகர்அனுப்பிய நன்கொடை(மாவட்ட முதல் மாணவனுக்கு) | 101,000 00 |
| 06. பேராசிரியர் நினைவுப்பரிசிலுக்கு(எமதுபாடசாலை மாணவனுக்கு)திரு .S.M. ஞானாநந்தன்அனுப்பியது | 100,000 00 |
| 07. NSB இல் நிரந்தர வைப்புஎடுக்கப்பட்ட தொகை | 148,800 00 |
| **மொத்தம்** | **1,237,517 35** |

| செலவு | தொகை |
|---|---|
| 01. ஆசிரியர் வேதனஉதவுதொகை | 13,000.00 |
| 02. ஆங்கில ஆசிரியருக்கான உதவுதொகை | 47,000.00 |
| 03. உயர்தர வகுப்பு இரசாயனவியல் ஆசிரியருக்கானஉதவுதொகை | 20,000.00 |
| 04. பாடசாலைபரிசளிப்பு விழா உதவுதொகை | 60,000.00 |
| 05. நுண்கலை மன்றத்துக்கான உதவுதொகை | 60,110.00 |
| 06. ஆசிரியர் தின விழாவிற்கான உதவுதொகை | 15,000.00 |
| 07. 2008 நடந்த வருடாந்த கூட்டத்திற்கான செலவு | 16,358.00 |
| 08. கொழும்புக்கிளை செயலாளர் மறைவிற்கான அஞ்சலிச்செலவு | 2,170.00 |
| 09. இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கில் போட்டது | 56,000.00 |

| | |
|---|---|
| 10. மாதாந்த கூடட்த்தின் போது 2 சோடா செலவு | 450.00 |
| 11. E.mail அனுப்பிய செலவு | 525.00 |
| 12. பேராசிரியர் நினைவு தின பேருரை அடித்த செலவு | 5,750.00 |
| 13. பேராசிரியர் நினைவுப் பரிசு மாவட்ட முதல் மாணவன் T.முகுந்தன்(ஹாட்லிக்கல்லூரி) | 10,000.00 |
| 14. பேராசிரியர் நினைவுபரிசு எமது பாடசாலைமாணவன்S.சேயந்தன் | 7,500.00 |
| 15. இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் போட்ட பணம் | 70,300.00 |
| 16. காசு பற்றாக்குறை காரணமாக அதிபரிடம் வாங்கிய கடன் மீள அளிக்கப்பட்ட தொகை | 104,500.00 |
| 17. பாடசாலை நுளைவாயில் செய் வதற்கு சுவிஸ்கிளை அனுசர ணையுடன் உதவியதொகை | 486,350.00 |
| 18. திரு S. தில்லையம்பலம் அவர்களின் அனுசரணையுடன் | |
| i. திரு.பா.மாணிக்கவாசகர் அவர்களால் பேராசிரியரின் நினைவுப்பரிசு மாவட்டத்தில் கணிதத்துறையில் முதல் மாணவ னுக்கு பரிசு கொடுப்பதற்காக போடப்பட்ட தொகை (NSB) | 101,000.00 |
| ii. எமது பாடசாலை மாணவனுக்கு பரிசில்வழுங்கல் திரு.S.M. ஞானானந்தன் வழங்கிய தொகை (NSB) | 100,000.00 |
| வங்கிக் கடன் | 1,500.00 |
| மீதி வங்கியில் - 59,262.70<br>காசாக - 741.65 | 60,004.35 |
| **மொத்தம்** | **1,237,517.35** |

## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க நுண்கலை மன்றம்

## 2009 தை தொடக்கம் 2009 மார்கழி வரைக்குமான வரவு செலவுக் கணக்கு.

**வரவு**

| மாதம் | பற்றுச்சீட்டு இல | ரூ | ச |
|---|---|---|---|
| தை | 568 - 614 | 4,925 | 00 |
| மாசி | 615 - 656 | 5,125 | 00 |
| பங்குனி | 657 - 717 | 6,950 | 00 |
| சித்திரை | 718 - 759 | 5,100 | 00 |
| வைகாசி | 760 - 805 | 5,625 | 00 |
| ஆனி | 806 - 826 | 3,000 | 00 |
| ஆடி | 827 - 852 | 3,150 | 00 |
| ஆவணி | - - | - | - |
| புரட்டாதி | 853 - 872 | 2,700 | 00 |
| ஐப்பசி | 873 - 913 | 5,150 | 00 |
| கார்த்திகை | 914 - 945 | 3,600 | 00 |
| மார்கழி | 946 - 972 | 3,300 | 00 |
| தாய்ச்சங்கப்பற்று | | 11,485 | 00 |
| | | 60,110 | 00 |

**செலவு**

| | ரூ | ச |
|---|---|---|
| சங்கீத ஆசிரியை செல்வி T.பிரதீபா | 9,000 | 00 |
| நடன ஆசிரியை செல்வி B.பொபிதா | 16,000 | 00 |
| மிருதங்க ஆசிரியர் திரு.T.பகிர்தன் | 12,000 | 00 |

| | | |
|---|---|---|
| வயலின் ஆசிரியை | | |
| திருமதி.S.தயாதர்ஷினி | 12,500 | 00 |
| உதவியாளர் | | |
| திரு.M. பாலசிங்கம் | 9,000 | 00 |
| நுண்கலைமன்ற விண்ணப்பம் | | |
| அடித்த செலவு + கொப்பி | 1,610 | 00 |
| | 60,110 | 00 |

மேற்படி நிதி ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம் - திருமதி.ப.அருள்வேல்நாதன்
(பொருளாளர்)

ஒப்பம் - திரு.சி.இராமகிருஷ்ணா
(கணக்காய்வாளர்)

# J/UDUPPIDDY AMERICAN MISSION COLLEGE
# PAST PUPIL'S ASSOCIATION
# PARENT BODY

UDUPPIDDY — VALVETTITURAI

**Ex-Official Patron:**
**Mr. K. THARMALINGAM**
*Principal*

**PRESIDENT:**
**Mr. K.SHANMUGASUNDRAM**
*B.Sc(Cey),Dip.in.Ed(Cey)*
*Rtd.Lecturer*

**SECRETARY**
**Mr. P.SURESHKUMAR**
*BBA(HRM SPECIAL)*
*Samurdhi Manager*

**TREASURER**
**Mrs. P.ARULVELNATHAN**
*B.Sc(Peradeniya)*
*Teacher*

**VICE PRESIDENT**

Mr. S.THILLAIYAMPALAM
Rtd. Principal

Mr. T.YOGASAMY
R.td. SLPS 11

**ASST.SECRETARY**

Mr. S. SUBRAMANIAM
Rtd.DLC/ALC

**COMMITTEE MEMBERS**

Dr. S. SRISATKUNARAJAH (Seniour Lecturer University of jaffna)
Mr. R. L. THEVARAJAH (Rtd. principal)
Mr. K.GUNASINGAM J.P (Rtd. I.S.A)
Mr. S.SOORIYAKUMAR (Rtd Teacher)
Mrs. C.SATCHITHANANDHAM (Teacher)
Mrs. G. KIRITHARAN (Teacher)
Mr. P. SHAKTHIVEL (Principal)
Mr. V. PIRAPAKARAN (Teacher)
Mr. A. RAJATHURAI

GURU Printers, Thirunelvely.